


# கலைமாணி (பொது)

## வெளிவாரிப்பட்டப்படிப்பு மாணவர்களுக்கான கையேடு

## கல்வி ஆண்டு 2016/2017

**வெளிவாரிப்பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்**

**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

**ஒலுவில்**

**2022**

**வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்**

**Centre for External Degrees and Professional Learning (CEDPL)**

**கலைமாணி**

**வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கான கையேடு**

**2016/2017 onwards**

# Handbook for the External Degree Student's BA (General)

**2016/2017 onwards**

**வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்**

**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

**ஒலுவில்**

**2022**

**Complited and Edited by:**

**Chief Editor:**
Prof. A. M. M. Navaz
Professor, Department of English Language Teaching
Faculty of Arts and Culture, SEUSL

**Co –Editors:**
Mr. S. Santhirakumar
Senior Lecturer, Department of Economics and Statistics
Faculty of Arts and Culture, SEUSL

Mrs. K. F. Seefa
Senior Lecturer in English
Department of Languages
Faculty of Arts and Culture, SEUSL

Mr. K. Nijamir
Senior Lecturer, Department of Geography
Faculty of Arts and Culture, SEUSL

Mrs. S. H. Sadeeka Farween
Senior Lecturer, Department of Languages
Faculty of Arts and Culture, SEUSL

Dr. M. I. Fouzul Kareema
Senior Lecturer, Department of English Language Teaching
Faculty of Arts and Culture, SEUSL

July 2022

**© 2022, South Eastern University of Sri Lanka**
*The Faculty of Arts and Culture, SEUSL reserves itself the right to change any information given herein as it considers appropriate, without prior notice. This Undergraduate Handbook is prepared as per the guidelines of the SLQF 2015.*
The handbook for the External Degree Student's BA (General) 2016/2017 onwards

**South Eastern University of Sri Lanka**
**Oluvil # 32360**
**Sri Lanka**
http://www.seu.ac.lk

## உபவேந்தரின் செய்தி



வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை இலகுபடுத்தக் கூடிய வகையில் இக்கையேடு தயாரிக்கப்பட்டு வெளிவருவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கையேடு வெளிவாரி மாணவர்களின் பதிவு நடவடிக்கைகள் முதல் அவர்கள் பட்டம்பெற்று வெளியேறுவது வரை தெளிவானதும் விளக்கமானதுமான தகவல்களை வழங்குவதிலிருந்து மாணவர்கள் தமது பட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான போதிய தெளிவினை இக்கையேட்டின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை மாணவர்கள் தமது விருப்புக்கு ஏற்றவிதத்தில் பாடநெறிகளைத் தெரிந்து கொள்வதற்கும் இக்கையேடு உதவும் என்பதில் ஐயமில்லை. அண்மைக்காலமாக பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் கலைப் பட்டதாரிகள் தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற மிகப்பெரிய விமர்சனம், பட்டதாரி மாணவர்களது பல்துறைசார் ஆற்றல்கள் குறைந்த மட்டத்தில் உள்ளது என்பதாகும்.

இது விடயத்தில் மாணவர்களாகிய நீங்கள் உங்களது மென் திறன், மொழித் திறன் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திறன் போன்றவற்றினை விருத்திசெய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அதன் மூலமே நீங்கள் தொழிற்சந்தையில் உங்களை ஒரு வெற்றிகரமான போட்டியாளராக தயார்படுத்திக்கொள்ள முடியும். அதற்கு ஏற்றவிதத்திலான கலைத் திட்ட மறுசீரமைப்புக்களுடனான பாடநெறிகளே இக்கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இக்கையேடு வழங்கும் விளக்கங்களைப் பாவித்து மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளை தங்கு தடையின்றி முன்னெடுத்துச் செல்லலாம் என நான் நம்புகின்றேன். உங்கள் கல்வியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் ஏ. றமீஸ்,**
உபவேந்தர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்

## பீடாதிபதியின் செய்தி



வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களின் நலன்கருதி, அவர்களுக்கான வழிகாட்டல் கையேடொன்றினை வெளியிடுவதற்கு வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது. தற்காலத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான கேள்வி அதிகரித்து வருகின்ற நிலையில், நவீன தொழிற்சந்தைற்கேற்ப பாட மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு, அது சார்ந்த தகவல்களை மாணவர்களுக்கு உரிய முறையில் கொண்டு சேர்ப்பது இன்றியமையாதது. இதற்கான முயற்சியினை எமது பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்துடன் இணைந்து வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எமது கலை கலாசார பீடம், கலைமாணி (பொது) பட்டத்திற்குரிய மூன்று வருடகால பட்டப்படிப்பினை வழங்கிவருகின்றது. இப்பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் காணப்படும் தர நிர்ணய சபையினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் மாணவர்களின் பல்துறைசார் ஆற்றல்களை வளர்ப்பதற்கான பாடவிதானங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் போட்டிமிக்க உலகில் தொழிற்சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள வழிசெய்வதாகவும் காணப்படுகின்றது. அதேவேளை தொழில்மய உலகில் எழுகின்ற புதிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளவும் மாணவர்களின் மென்திறன்களை விருத்தி செய்யவும் உதவும் வகையில் ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பம் சார் அறிவினை வழங்கக்கூடியதாகவும் மாணவர் மையக் கல்வி முறைக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதாகவும் கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித்திட்டம் அமைந்திருக்கின்றமை சிறப்புக்குரியதாகும்.

புதிய கல்வி ஆண்டில் பதிவு செய்துள்ள மாணவர்கள் கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு இக்கையேடு பெரிதும் துணைபுரியும் என்று நம்புகின்றேன். இதன்மூலம் வெளிவாரிப் பட்டப்படிப்பினை தொடர்வதற்கான தகைமைகள், பதிவு நடவடிக்கைகள், பரீட்சை நியமங்கள், பட்டத் தராதரங்கள் முதலான தகவல்களை மாணவர்கள் அறிந்து கொள்ள முடிவதுடன் கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பாட அலகுகள் தொடர்பான குறிப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.வெளிவாரிப் பட்டப்படிப்பினை தொடரும் புதுமுக மாணவர்கள் இக்கையேட்டின் மூலம் தமக்குத் தேவையான தகவல்களைப் பெற்று, அவர்களது கல்வி நடவடிக்கையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எனது வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் எம்.எம். பாசில்,**
பீடாதிபதி
கலை கலாசார பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம். ஒலுவில்

**பணிப்பாளரின் செய்தி**



வெளிவாரி கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சி திட்டம் தொடர்பான மாணவர்களுக்கான பயனுள்ள தகவல்களுடன் இக்கையேடு வெளிவருகின்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய முற்றிலும் மறுசீரமைக்கப்பட்டு இயங்கிவருகின்றது. இந்நிலையம் வெளிவாரி மாணவர்களின் நலன் கருதி பல்வேறுபட்ட பட்டநிகழ்ச்சித்திட்டங்களையும் மற்றும் சமூக தெழில்சார் கற்கை நெறிகளையும் நடாத்தி வருகின்றது.

வெளிவாரி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுள் கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இக்கற்கை நெறியினை வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்துடன் இணைந்து நடாத்தி வருகின்றது. இக்கற்கைநெறி தொடர்பான முக்கிய பயனுள்ள தகவல்களான வெளிவாரிப் பட்டப்படிப்பினை தொடர்வதற்க்கான தகைமைகள், பதிவுத்தகவல்கள், பரீட்சை நியமங்கள், பட்டத்தின் தராதரங்கள் ஆகியன இக்கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்ப்படும் அனைத்து பாட அலகுகளும் தொழிற் சந்தைக்கு ஏற்ற விதத்தில் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

இக்கையேடு மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினை தங்கு தடையின்றி மேற்கொள்வதற்க்கான சிறந்த வழிகாட்டல்களை வழங்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே மாணவர்கள் தமது கற்கை நெறிகளை முறையாக கற்று உரிய காலத்தினுள் பூரணப் படுத்தி தமது பட்டங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சி திட்டத்திற்க்கு அனுமதி பெற்று கல்வியை தொடரும் சகல மாணவர்களையும் வாழ்த்துவதிலும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கையேடு வெளிவருவதில் ஒத்துழைப்பு வழங்கிய உபவேந்தர், பீடாதிபதி, கல்வி, கல்விசாரா ஊழியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், தொகுப்பாசிரியர்கள் உட்பட அனைவருக்கும் எனது நன்றிகள். குறிப்பாக கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் பேராசிரியர் கே. கணேசராஜா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**பேராசிரியர் கலாநிதி திருமதி எப்(f). எச். அப்துல் றவூப்(f)**
பணிப்பாளர், வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# Contents


உபவேந்தரின் செய்தி ....................................................................................iv

பீடாதிபதியின் செய்தி ....................................................................................v

பணிப்பாளரின் செய்தி ....................................................................................vi

1. அறிமுகம் .................................................................................... 1

2. கலை கலாசார பீடம் .................................................................................... 2

2.1 அறிமுகம் ....................................................................................2

2.2 கலை கலாசார பீடத்தின் நிறுவனக்கட்டமைப்பு ....................................................................................2

3. வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் ....... 3

3.1 நிறுவனக் கட்டமைப்பு ....................................................................................5

3.2 முகாமைத்துவ சபையின் பணிகள் (Functions of Board of Management) ................5

3.3 கற்கைப் பிரிவுச் சபை (Board of Study (BOS) /BA) ....................................................................................6

3.4 பதிவு செய்தலுக்கான தேவைப்பாடுகள் ....................................................................................6

3.5 பதிவு செய்தல் செயன்முறை ....................................................................................7

3.6 பரீட்சை நடைபெறும் மொழி ....................................................................................8

3.7 பாடவிதானம் ....................................................................................8

3.8 நிகழ்ச்சித் திட்டத்தின் நெகிழ்வுத் தன்மையும் கால எல்லையும் ............................8

4. பரீட்சைப் பிரமாணங்கள் .................................................................................... 9

5. ஒப்படைகளை சமர்ப்பித்தல் .................................................................................... 10

6. பரீட்சைகளின் சுருக்கம் .................................................................................... 10

7. பரீட்சைக்குத் தோற்றுதல் .................................................................................... 10

8. பரீட்சை முடிவுகள் .................................................................................... 11

9. கட்டணங்கள் .................................................................................... 11

10. பரீட்சைக் குற்றங்களும் தண்டனைகளும் .................................................................................... 12

11. கற்கைநெறிகளுக்கான தரக் குறியீடு .................................................................................... 13

**12. பாடத்தேர்வு மற்றும் பதிவுக்கான விதிமுறைகள்:**............................................ 20

**13. பிரதான பாடங்களின் பாடநெறிகள்** .................................................................. 22

**14. Compulsory Courses** ........................................................................... 30

**15. கலைமாணி (பொது) பட்டமொன்றைப் பூர்த்தி செய்தல்**................................. 31

# 1. அறிமுகம்

இலங்கையின் பத்தாவது தேசியப் பல்கலைக்கழகமாக 1995இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பத்தில் பல்கலைக்கழகக் கல்லூரியாகவே செயற்பட்டது. 1996இல் முழு அளவிலான ஒரு பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது இப்பல்கலைக்கழகத்தில் கலை கலாசார பீடம், வர்த்தக முகாமைத்துவ பீடம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம், இஸ்லாமியக் கற்கைகள் அரபு மொழி பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழிநுட்ப பீடம் ஆகிய ஆறு பீடங்கள் உள்ளன. பிரயோக விஞ்ஞான பீடம் சம்மாந்துறை வளாகத்திலும் ஏனைய ஐந்து பீடங்களும் ஒலுவில் வளாகத்திலும் அமையப்பெற்றுள்ளன.

இப்பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகம் ஒலுவில் வளாகத்தில் அமைந்துள்ளது. சம்மாந்துறை வளாகத்தில் பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகமானது அதற்கென பிரத்தியேகமான தகவல் தொழில்நுட்ப நிலையத்தினையும் (IT) முழு வசதிகளுடனும் கூடிய ஆய்வுகூடங்களையும் கொண்டுள்ளது. இவை தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய துறைகளிலான பட்டப்படிப்புக்கு மிகவும் பயன்படுகின்றன. பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பிக்கும் துறை (DELT) மாணவர்களின் ஆங்கில மொழித்திறன் விருத்தியில் கவனம் செலுத்துகின்றது. இப்பிரிவானது தனது சேவையினை பல்கலைக்கழகத்தின் ஆறு பீடங்களுக்கும் வழங்கி வருகின்றது.

பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தொழில் வழிகாட்டல் பிரிவு, ஆற்றலுள்ள பட்டதாரிகளை உருவாக்குவதற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி வருவதுடன் ஏனைய தொழில்சார் நிறுவனங்களுடனான தொடர்பினையும் பேணிவருகின்றது. அத்தோடு பல்வேறு செயற்பாட்டாளர்கள் தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றது. இவற்றுக்கப்பால் இப்பல்கலைக்கழகத்தில் உள்ள பணியாளர் விருத்தி நிலையம், உடற் கல்விப் பிரிவு, பால்நிலைக் கற்கைகள் பிரிவு, மாணவர் நலன்புரி மற்றும் ஆதரவுச் சேவைகள் நிலையம், சுகாதார நிலையம், சமூக நல்லிணக்கத்திற்கான நிலையம் போன்றனவும் பல்கலைக்கழக சமூகத்திற்கான தமது சேவைகளை வழங்கி வருகின்றன.

தொழில் துறைக்கு ஏற்றவிதமான பட்டதாரிகளை உருவாக்கும் உன்னத நோக்கில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அதனது தூர நோக்கினையும் பணிக்கூற்றினையும் வடிவமைத்துள்ளது:

***தூரநோக்கு (Vision):*** *விஞ்ஞானங்கள், தொழில்நுட்பங்கள், மானிடவிடயங்களில் உயர் கற்கைகளுக்கும் புத்தாக்கங்களுக்குமான தென்னாசியாவின் ஒரு சர்வதேச புகழ்பெற்ற நிலையமாக விளங்குதல்.*

***பணிக்கூற்று (Mission):*** *பிராந்திய மற்றும் தேசிய தேவைகள், சமூக நல்லிணக்கம், பங்காளர்களின் வலுவாக்கம், திருப்தி என்பனவற்றை நோக்காகக் கொண்டு அறிவினையும் புத்தாக்கங்களையும் உருவாக்கி பரப்புவதனூடாக சர்வதேச*

*தரத்திலான உயர் கற்கைகளுக்கான விரிவான வாய்ப்பினை வழங்குதல்.*

## 2. கலை கலாசார பீடம்

### 2.1 அறிமுகம்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னோடிப் பீடங்களுள் ஒன்றாக கலை கலாசார பீடம் விளங்குகின்றது. இப் பல்கலைக்கழக உருவாக்கத்துடன் தாபிக்கப்பட்ட இப்பீடம், சமூக விஞ்ஞானங்கள் துறை, மொழித்துறை, புவியியல் துறை, அரசியல் விஞ்ஞானத்துறை, பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை, சமூகவியல் துறை, தகவல் தொழிநுட்ப துறை, ஆங்கில மொழி கற்பித்தல் துறை ஆகிய எட்டு துறைகளைக் கொண்டுள்ளது. அறுபத்து ஐந்து விரிவுரையாளர்களை கொண்ட இப்பீடத்தில் 2000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தமது கற்கைகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

தற்சமயம் கலை கலாசார பீடம் பொதுக் கலைமாணி மற்றும் சிறப்புக் கலைமாணி ஆகிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி வருகின்றது. பல்வேறு பாடநெறிகளில் இவ்விரு பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதேவேளை மொழித்துறையானது பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, முதுமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி ஆகிய பட்டப்பின்படிப்பு பாடநெறிகளையும் நடத்தி வருகின்றது. மேலும் ஏனைய துறைகளும் தற்போது முதுமாணி, முதுதத்துவமாணி பட்டப்பின்படிப்பு பாடநெறிகளை வழங்குகின்றது.

### 2.2 கலை கலாசார பீடத்தின் நிறுவனக்கட்டமைப்பு



### 3. வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்

வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையம் 2004 இல் தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வெளிவாரி கலை மற்றும் முகாமைத்துவ வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான இளமாணிப் பட்டப்படிப்பினை நடைமுறைப்படுத்திய இந்நிலையம் தற்சமயம் மேற்குறிப்பிட்ட பட்ட கற்கைநெறிகள் பல்வேறு சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளையும் நடத்தி வருகின்றது.

வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 15.10.2010ஆம் திகதியிடப்பட்ட 932ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு அமையவும் 01.02.2010ஆம் திகதிய வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் வெளிவாரிக் கற்கைகள் தொடர்பான கையேட்டின் அடிப்படையிலும் மறுசீரமைக்கப்பட்டு வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

தற்சமயம் சுமார் 12000 மேற்பட்ட வெளிவாரி மாணவர்கள் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தில் பதிவினை மேற்கொண்டு பின்வரும் கற்கைநெறிகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

i. கலைமாணி (பொது) - BA ( General )
ii. வியாபார நிர்வாகமாணி (பொது) - BBA (General)
iii. வர்த்தகமாணி (பொது) - BCOM (General)

மேற்குறிப்பிட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுள் கலைமாணி (பொது) வெளிவாரி கற்கைநெறியானது மெய்யியல், புவியியல், பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல், ஆங்கிலம், அரசியல் விஞ்ஞானம், சமூகவியல், தமிழ், புள்ளிவிபரவியல், தகவல் தொழிநுட்பம் ஆகிய பல பாடநெறிகளை ஒன்றிணைத்த பட்ட கற்கைநெறியாகும்.

கலைமாணி கற்கைநெறியானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இக்கற்கைநெறி சார்ந்த நிருவாக அலுவல்கள் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தின் (CEDPL) ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுக் கலைமாணி கற்கைநெறியானது மாற்றமுறும் புதிய உலகின் இயல்பினைப் பிரதிபலிப்பதுடன் தொழில் உலகில் சிறந்த போட்டியாளர்களை உருவாக்குவதற்கான அடிப்படை அறிவினை வழங்குவதாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

பொதுக் கலைமாணி பட்ட கற்கைநெறியானது, சமூகச் சூழலொன்றில் தீர்மானம் எடுத்தலில் செல்வாக்குச் செலுத்தும் சமூக மானிட, ஒழுக்கம்சார் மற்றும் பொதுக் கல்விப் பரப்பில் உள்ள பிரதான பாடங்களை உள்ளடக்கியதாகும்.

மேலும் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL) பின்வரும் தொழில்சார் கற்கைகளையும் வழங்கி வருகின்றது.

- Professional Diploma in Counseling
- Diploma in Journalism
- Certificate in Computer Application
- Short Course in Web Designing and Development
- Short Course in Internet and E-mail Application

வெளிவாரிக் கற்கைகளுக்கான நிலையம் முகாமைத்துவ சபையினால் நிருவகிக்கப்படுகிறது. சகல பட்டநிகழ்ச்சிகளும் கற்க்கைப் பிரிவு சபை (Board of Study ) பீட சபை (Faculty Board) பேரவைகளினால் (Senate) வடிவமைக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு \செயற்படுத்தப்படுகிறது.

## *Vision for CEDPL*

"To be a Centre for excellence in providing opportunities for learning and becoming a strategic partner in the South Eastern University, the region and the country"

## *Mission for CEDPL*

"To provide equitable access to quality degrees and professional courses to the optimum competitive stakeholder satisfaction by strengthening capacity and good governance with improved financial management and sustainability"

## 3.1 நிறுவனக் கட்டமைப்பு




## 3.2 முகாமைத்துவ சபையின் பணிகள் (Functions of Board of Management)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2010 டிசம்பர் மாதம் 1ஆம் திகதி வெளியிடப்பட்ட 'வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் விரிவாக்கக் கற்கைகள் தொடர்பான கைநூலின் 3.1 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை முகாமைத்துவ சபை கொண்டிருக்கும்.

## 3.3 கற்கைப் பிரிவுச் சபை (Board of Study (BOS) /BA)

வெளிவாரிப் பட்டப்படிப்புக் கற்கை நிலையம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட கற்கைப் பிரிவுச் சபையொன்றினைக் கொண்டிருக்கும்:

1. கற்கைச் சபையின் தலைவர் (கலை கலாசார பீடத்தின் பீட அவையினால் நியமிக்கப்படும் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் கற்கைச் சபையின் தலைவராக இருப்பார்).
2. பணிப்பாளர் / வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (செயலாளர்)
3. பிரதிப் பணிப்பாளர் - பதிவு மற்றும் பரீட்சை
4. பிரதிப் பணிப்பாளர் - கற்கை வளங்கள்
5. பிரதிப் பணிப்பாளர் - பயிற்சி
6. கலை கலாசார பீடத்தினால் நியமிக்கப்படும் உள்வாரியான மூன்று விரிவுரையாளர்கள்
7. கலை கலாசார பீடத்தினால் நியமிக்கப்படும் இரண்டு வெளிவாரி உறுப்பினர்கள்
8. கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித்திட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர்

## 3.4 பதிவு செய்தலுக்கான தேவைப்பாடுகள்

கலைமாணி (பொது) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் ஆண்டில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரி 18 வயதினைப் பூர்த்தி செய்திருப்பதோடு வேண்டப்படும் பின்வரும் தகைமைகளுள் ஏதாவது ஒன்றில் ஆகக் குறைந்த தகைமையினையாவது கொண்டிருத்தல் வேண்டும்:

க.பொ.த.(உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஆகக்குறைந்த சித்திகளுடன் (S) பொது உளச் சார்புப் பரீட்சையில் குறைந்தபட்சம் 30% புள்ளிகளை அல்லது காலத்திற்குக் காலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் புள்ளியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய தகைமைகள். அத்தகைமைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 01.12.2010 ஆம் திகதி வெளியிடப்பட்ட வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் விரிவாக்கக் கற்கைநெறிகள் தொடர்பான கைநூலின் 3.1 பிரிவுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

## 3.5 பதிவு செய்தல் செயன்முறை

### i. பதிவு செய்தல்

கலைமாணி (பொது) பட்ட கற்கைநெறியானது தொடர்வதற்காக மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் கோரப்படும் விண்ணப்பத்தினை பூரணப்படுத்தி, குறித்த விண்ணப்பத்தில் கோரப்படும் ஆவணங்களையும் இணைத்து உரிய தினத்திற்கு முன்னர் அல்லது குறிப்பிட்ட தினத்தன்று வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்திற்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள் முதலியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது பதிவுக்காக பல்கலைக்கழகத்திற்கு நேரடியாக அழைக்கப்படும்போது மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும். மூலப்பிரதிகள் நகல் பிரதிகளுடன் ஒப்புநோக்கப்பட்ட பின்னர் விண்ணப்பதாரிகளிடம் மீள ஒப்படைக்கப்படும். மூலப்பிரதிகள் இன்றி பதிவுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### ii. பதிவு இலக்கம்

வெளிவாரி மாணவராக பதிவு செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் பதிவு இலக்கம் ஒன்று வழங்கப்படும். இவ்விலக்கத்தினை பல்கலைக்கழகத்துடனான தமது சகல கடிதத் தொடர்புகளிலும் விண்ணப்பதாரிகள் குறிப்பிடுதல் அவசியமாகும்.

### iii. பதிவின் செல்லுபடித் தன்மையும் பதிவுப் புத்தகமும்

வெளிவாரிப் பட்டத்துக்கான பதிவானது பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து ஆறு (06) கல்வி ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். இருப்பினும் பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து மூன்று (03) கல்வி ஆண்டுகளுக்குள் தங்களது கற்கை நெறியைப் பூர்த்தி செய்யாதவர்கள் 4ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் கல்வி ஆண்டுகளுக்கு தங்களது பதிவை புதுப்பித்துக் (Renewal) கொள்ளுதல் வேண்டும். இதற்கு பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணம் ஒன்று செலுத்தப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பதாரிகளுக்கும் அடையாள அட்டை ஒன்று வழங்கப்படும்.

### iv. பதிவினை இரத்து செய்தல்

விண்ணப்பதாரி சுய விருப்பத்தின் பேரில் எந்நேரத்திலும் தனது வெளிவாரிப் பட்டப் பதிவினை இரத்துச் செய்யலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட எந்த கட்டணமும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

v. **மீள் பதிவும் பரீட்சையும்**

முதலாம் வருடத்தின் முதலாம் பருவப் (Semester) பரீட்சையில் குறைந்தது 50% ஆன பாடங்களுக்கு தோற்றிய அல்லது விலக்குப் பெற்ற (Exempted) பரீட்சார்த்திகள் மட்டுமே முதலாம் வருடத்தின் இரண்டாம் பருவப் (Semester) பரீட்சைகளுக்காக தம்மை மீள் பதிவு செய்து கொள்ளும் தகைமையைப் பெறுவர். மேற்குறிப்பிட்ட நிபந்தனையின் பிரகாரமே இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடப் பருவகாலப் (Semester) பரீட்சைகளுக்கான மீள் பதிவுகளும் கருத்திற் கொள்ளப்படும்.

## 3.6 பரீட்சை நடைபெறும் மொழி

கலைமாணி (பொது) வெளிவாரிக் கற்கைநெறிக்கான பரீட்சைகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் நடைபெறும்.

## 3.7 பாடவிதானம்

வெளிவாரிப் பரீட்சைகள் நடைபெறும் அனைத்து கற்கை அலகுகளுக்குமான பாடவிதானங்கள் அதற்கான வழிகாட்டல் கையேடுகள் என்பனவற்றை பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து மாணவர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

## 3.8 நிகழ்ச்சித் திட்டத்தின் நெகிழ்வுத் தன்மையும் கால எல்லையும்

கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான காலம் மூன்று கல்வியாண்டுகளாகும். ஒவ்வொரு கல்வியாண்டும் இரண்டு பருவங்களை உள்ளடக்கியது.

ஒவ்வொரு பாட அலகும் தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் குறித்த பருவத்தின் (Semester) இறுதியில் இடம்பெறும் எழுத்து மூலப் பரீட்சை என்பவற்றினை உள்ளடக்கியது. பரீட்சை முடிவுகள் யாவும் பருவங்களின் (Semester) அடிப்படையில் வெளிப்படுத்தப்படுவதுடன் மாணவர்கள் தமது பதிவிலிருந்து ஆறு (06) கல்வி ஆண்டுகளுக்குள் குறிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய முழுத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

கலைமாணிப் கற்கைநெறியானது மாணவர்களின் தேவைப்பாடுகள் மற்றும் வசதிக்கு ஏற்றவிதத்தில் நெகிழ்ச்சியானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏதேனும் காரணத்தால் மாணவர் எவரும் பட்ட கற்கைநெறியானது தொடர விரும்பாது இருப்பின் அல்லது இடைநிறுத்திக் கொள்ள விரும்பும் போது, அவர் குறித்த கல்வியாண்டுக்குரிய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்திருக்குமிடத்து பின்வரும் சான்றிதழ்களைப் பெறமுடியும்:

- **சான்றிதழ்:** முதலாம் வருட கற்கையினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தல் **(30 Credits)**.
- **டிப்ளோமா:** முதலாம் மற்றும் இரண்டாம் வருட கற்கையினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் **(60 Credits)**.

**குறிப்பு:** தமது மூன்றாண்டுப் பரீட்சைகளையும் தனது பதிவுத் திகதியிலிருந்து தொடர்ச்சியான மூன்று கல்வியாண்டுக்குள் பூர்த்தி செய்யத் தவறுபவர்கள் சிறப்புச் சித்தி (Class) பெறுவதற்கான தகைமையினை இழப்பர். எனினும் மருத்துவக் காரணங்களுக்கான மேன்முறையீடுகள் கருத்திற்கொள்ளப்படும்.

## 4. பரீட்சைப் பிரமாணங்கள்

1. பரீட்சைகள் யாவும் கற்கைநெறி அலகுகளை (Course Units) அடிப்படையாகக் கொண்டு நடைபெறும்.
2. பொதுப்பட்டத்துக்கென முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் நடத்தப்படும் பருவகாலப் பரீட்சைகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட தரப்புள்ளிகள் (Credit) கவனத்திற் கொள்ளப்படும்.
3. பரீட்சைகள் குறித்த தரப்புள்ளிகளுக்கான (Credit) கற்கை அலகுகளில் சித்திபெறத் தவறும் பரீட்சார்த்திகள் அதற்கு அடுத்த பரீட்சையில் அப்பாட அலகுகளுக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். எனினும் விஷேட மீள்பரீட்சை எதுவும் நடாத்தப்பட மாட்டாது.
4. குறித்த ஒரு பருவகாலப் (Semester) பரீட்சைப் பாட அலகுகளுக்குத் தோற்றி சித்திபெறத் தவறும் பரீட்சார்த்திகள் அதற்கு அடுத்த ஆண்டுக்கான பருவகாலப் (Semester) பரீட்சைக்குத் தோன்றுவதற்குத் தடையேதுமில்லை.

   உதாரணமாக, முதலாம் வருட முதலாம் பருவப் (Semester) பாட அலகுகளில் சித்தி பெறத் தவறும் பரீட்சார்த்திகள் அடுத்த ஆண்டில் ஏனைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு முதலாம் வருட முதற்பருவப் (Semester) பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
5. மீள் பரீட்சார்த்தியாக குறித்த பாட அலகுகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவருக்கு அப்பாட அலகில் ஆகக் கூடுதலாக 40 புள்ளிகள் (C) தரம் மாத்திரமே வழங்கப்படும்.

## 5. தொடர் மதிப்பீடுகள்

கலைமாணி (பொது) பட்ட கற்கைநெறியினைத் தொடரும் ஒவ்வொரு மாணவரும் குறிப்பிட்ட பருவத்தில் (Semester) தத்தமது பாட அலகுகளில் தொடர் மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளுக்கு முப்பது (30) புள்ளிகள் வழங்கப்படும். இத்தொடர் மதிப்பீட்டுப் புள்ளிகளுடன் (30) பருவ இறுதிப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளும் (70) சேர்க்கப்பட்டு மொத்தப்புள்ளி வழங்கப்படும்.

### 6. பரீட்சைகளின் சுருக்கம்

**கலைமாணி (பொது) பட்டம் BA**

First Year (Semester – I) Examinations in Bachelor of Arts

First Year (Semester – II) Examinations in Bachelor of Arts

Second Year (Semester – I) Examinations in Bachelor of Arts

Second Year (Semester – II) Examinations in Bachelor of Arts

Third Year (Semester – I) Examinations in Bachelor of Arts

Third Year (Semester – II) Examinations in Bachelor of Arts

### 7. பரீட்சைக்குத் தோற்றுதல்

1. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படும். விண்ணப்பிக்கத் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கான படிவங்களைப் பெற்று குறிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும்.

2. பரீட்சைகள் ஆரம்பமாவதற்கு ஆகக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும்.

3. பரீட்சைக்கு விண்ணப்பித்ததன் பின்பு தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக தமது பரீட்சை விண்ணப்பத்தினை விலக்கிக் கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் தினத்திலிருந்து ஒரு மாத காலத்தினுள் அது தொடர்பான எழுத்து மூல வேண்டுகோளை பதிவாளருக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

4. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கான அனுமதி அட்டையினையும், மாணவர் அடையாள அட்டையினையும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

5. சுகவீனம் காரணமாக பரீட்சைக்கு சமுகமளிக்க முடியாமல் போகும் பரீட்சார்த்திகள் அது தொடர்பாக பதிவாளருக்கு பரீட்சை நடைபெற்று இருவாரங்களுள் உடனடியாக எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். குறித்த சுகவீனம் தொடர்பாக அங்கீகரிக்கப்படத்தக்க மருத்துவச் சான்றிதழ் சுகவீனம் ஏற்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலத்தினுள் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரிய காலத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டது.

## 8. பரீட்சை முடிவுகள்

1. விண்ணப்பதாரியொருவர் குறித்த பரீட்சைப் பிரமாணங்களுக்கு அமைவாக சித்தி பெறுவதற்கான தகைமையினை அடையப் பெற்றுள்ளார் என்பதனை பரீட்சைகள் சபை முடிவு செய்யும். ஏதாவது பாட நெறிகளில் சித்திபெறத் தவறும் பரீட்சார்த்திகள் அதற்கு அடுத்த சந்தர்ப்பத்தில் அவற்றிற்குத் தோற்றி சித்தி பெற வேண்டும்.

2. பரீட்சைகளில் முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்படும் பரீட்சார்த்திக்கு அது தொடர்பில் பல்கலைக்கழக பிரமாணங்களுக்கு அமைவாக பேரவையின் உப குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப குறித்த பரீட்சார்த்திக்கு உரிய தண்டனையை பல்கலைக்கழக மூதவை நிர்ணயிக்கும்.

3. குறித்த பட்டப் பரீட்சை தொடர்பான இறுதிப் பரீட்சை முடிவுகளை பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவை என்பன அங்கீகரித்த பின்னர் பட்டச் சான்றிதழ் பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கப்படும்.

4. வெளிவாரிப் பட்டப் பரீட்சை விடைத்தாள் மீள் ஆய்வுக்கான வேண்டுகோள்கள் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக தகவல்களுக்கு பல்கலைக்கழ இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

### 9. கட்டணங்கள்

கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான பதிவு மற்றும் பரீட்சை கட்டணங்கள் அனைத்தும் வருடங்களின் அடிப்படையில் குறித்த கட்டணத் தொகைகள் அனைத்தும் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் அறிவிக்கப்படும்.

கட்டணங்கள் அனைத்தும் மக்கள் வங்கியின் ஏதேனும் ஒரு கிளையில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மக்கள் வங்கி, அட்டாளைச்சேனை, கணக்கு இலக்கம் 228-1001-6000-1692 இற்கு வரவு வைக்கக் கூடியதாக செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணங்கள் யாவும் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற படிவத்திலேயே (Pay in Voucher – PIV) செலுத்தப்பட வேண்டும். கட்டண ஒழுங்கினையும் இதர விடயங்களையும் மாற்றியமைப்பதற்கான முழு உரிமையும்

பல்கலைக்கழகத்திற்கு உண்டு. செலுத்தப்பட்ட எந்தக்கட்டணமும் மீள்அழிக்கப்படமாட்டாது.

## 10. பரீட்சைக் குற்றங்களும் தண்டனைகளும்

Applicable internal BY-LAW NO. 2 OF 1996 FOR CONDUCT AT EXAMINATIONS Prepared under section 135 of the Universities Act No. 16 of 1978 as amended by the Universities Amendment Act No. 7 of 1985 and approved by the University Council on 24.08.1996.
This By-Law may be cited as By-Law No. 2 and shall come into force on 15th July, 1996

### 10.1 சில பரீட்சைக் குற்றங்கள்:

- அனுமதிக்கப்படாத ஆவணங்களை வைத்திருத்தல்
- பார்த்து எழுதுதல்
- ஏமாற்றுதல்
- ஆள்மாறாட்டம் செய்தல்
- முறைகேடான நடத்தை
- ஏனைய பரீட்சார்த்திக்கு முறையற்ற உதவி வழங்கலும் உதவி பெறுதலும்

### 10.2 விதிக்கப்படக் கூடிய சில தண்டனைகள்:

i. பரீட்சார்த்தியின் பரீட்சைத் தன்மையை இரத்துச் செய்தல்.
ii. பதிவினை இடை நிறுத்தல் அல்லது இரத்துச் செய்தல்.
iii. குறிப்பிட்ட காலம் பரீட்சைக்குத் தோற்றுவதிலிருந்து தடை செய்தல்.
iv. பல்கலைக்கழக மூதவையினால் நிர்ணயிக்கக் கூடிய வேறு ஏதும் தடைகளை விதித்தல்.

## 11. கற்கைநெறிகளுக்கான தரக் குறியீடு

ஒவ்வொரு தரத்துக்குமான (Grade) புள்ளி வீச்சுக்களும் அவற்றுக்கான தரப்புள்ளிகளும் (Credits) கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| புள்ளிகளின் வீச்சு | தரம் | தரப்புள்ளி பெறுமானம் |
|---|---|---|
| 85-100 | A+ | 4.00 |
| 70-84 | A | 4.00 |
| 65-69 | A- | 3.7 |
| 60-64 | B+ | 3.3 |
| 55-59 | B | 3.0 |
| 50-54 | B- | 2.7 |
| 45-49 | C+ | 2.3 |
| 40-44 | C | 2.0 |
| 35-39 | C- | 1.7 |
| 30-34 | D+ | 1.3 |
| 25-29 | D | 1.0 |
| 00-24 | E | 0.0 |

**தரப்புள்ளிச் சராசரி (GPA) கணிப்பீடு செய்வதற்கான மாதிரி:** கலைமாணி (பொது) முதலாம் வருடப் பரீட்சையொன்றில் மாணவர் ஒருவர் பெற்ற பெறுபேறுகளின் தரப்புள்ளிச் சராசரி (GPA) பின்வரும் சூத்திரத்தினைக் கொண்டு கணிப்பிடப்படும்:

